**செய்தி வெளியீடு எண்: 637 நாள்:20.10.12**

**அறிக்கை**

மழைக்கால நிவாரண பணிகளை அரசு சரிவர நிறைவேற்றவில்லை என ‘‘எப்போதுமே மந்த நிலையில் இருக்கும் ஒருவர்’’ கூறியிருப்பதை சில நாளிதழ்கள் இன்று (20.10.2012) செய்தியாக வெளியிட்டுள்ளன. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துரைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்னரே, கனமழையிலிருந்து மக்களைக் காக்கும் வகையில், பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையிட்டு இருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவுரைக்கிணங்க உயர் அதிகாரிகளுடன் அவ்வப்போது கலந்தாலோசிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக 18.10.2012 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை

இயக்குநர் மற்றும், உயர் அதிகாரிகள், களப்பணியில் ஈடுபட்டு வரும் பொறியாளர்களுடன் விவாதித்து தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

சென்னை மாநகரில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணிகள், ஐந்து மாதங்களுக்கு முன்னரே, அதாவது, மே மாதமே துவங்கப்பட்டது. தூர்வாரப்பட வேண்டிய மொத்தம் 4725 எண்ணிக்கையிலான 1251 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கையின் காரணமாக மழைநீர் சாலைகளில் தேங்குவது வெகுவாக குறைந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க சென்னை மாநகரில் உள்ள முக்கியமான சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேங்காத வகையில் தண்ணீரை உடனுக்குடன் வெளியேற்ற உயர் சக்தி கொண்ட மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அனைத்து இடங்களிலும், மோட்டார் பம்புகளை இயக்குவதற்கு தேவையான பணியாளர்களும், போதுமான டீசல் கையிருப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், எங்கும் எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய வகையிலான 107 பம்ப்செட்டுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சாலைகளில் சாய்ந்து விழும் மரங்களால் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் அவற்றை உடனுக்குடன் அகற்றத் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணியை சிறப்பாக மேற்கொள்ள சென்னை

காவல் துறையுடன் இணைந்து சென்னை மாநகராட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக சென்னை மாநகராட்சி பொறியாளர் ஒருவர் காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் பணியமர்த்தப்பட்டுள்ளார். மழையின் காரணமாக சாலைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்வதற்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பாதிப்புகளை செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் ஏற்கெனவே இறுதி செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை சீராக விநியோகிக்க மிகுந்த முன்னுரிமை அளிக்க வேண்டும் என ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில், மாநகருக்குத் தேவையான பாதுகாப்பான குடிநீர் வழக்கம்போல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி போன்றே சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் மழைக் காலத்தில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மாநகரில் மொத்தமுள்ள 93,761 பாதாளச் சாக்கடை நுழைவுகளிலும் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதனால் சாலைகளில் கழிவுநீர் வெளியேறி மழைநீருடன் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குடிநீரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு குளோரின் இருப்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி சென்னை மாநகராட்சியும், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் மேற்கூறியவாறு போர்க்கால அடிப்படையில் சீரிய நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில், ஒருவர் அவற்றை எல்லாம் உணர்ந்து கொள்ளும் நிலையில் இல்லாமல் பொத்தாம்பொதுவில் புழுதி வாரி தூற்றியிருப்பது வேதனைக்குரியது. இனியாவது அவர் அரசு மீது குற்றம் சாட்டுவதற்கு முன் உண்மை நிலையை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கே.பி.முனுசாமி,<br>
நகராட்சி நிர்வாகம் மற்றும்<br>
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**